தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

www.dhinakani.com
dinakani2023@gmail.com

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




மலர் : 02 | இதழ் :191 | 4 - பக்கம் | 07.02.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6




**கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

விளக்கம்:

கல்வி கற்று மனத்துள் கோபம் பிறக்காமல் காத்து, அடக்கமாக வாழும் ஆற்றல் படைத்தவனை அடைவதற்கான நேரத்தை எதிர்பார்த்து அறம் அவன் வழியில் நுழைந்து காத்து இருக்கும்.

## பிரதமர் மோடியுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு..!!



டெல்லி: அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் விலங்கு பூட்டப்பட்ட நிலையில் இந்தியா அழைத்துவரப்பட்ட விவகாரம் சர்ச்சையாகி உள்ள நிலையில் பிரதமருடன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துள்ளார். வெளியுறவுத்துறை அமைச்சருடன் நடைபெறும் ஆலோசனைக்கு பிறகு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி விளக்கம் அளிக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

## இந்தியர்கள் நாடு கடத்தப்பட்ட விவகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகள் போராட்டம்




புதுடெல்லி: அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள்நாடுகடத்தப்பட்ட விவகாரத்தால் நாடாளுன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட நிலையில், இன்று மதியம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மாநிலங்களவையில் விளக்கம் அளிக்க உள்ளார். அமெரிக்க ராணுவ விமானத்தில் இந்தியர்கள் கைகளில் விலங்கிடப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் கொண்டுவரப்பட்டதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்துக்கு உள்ளே அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவை அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது. அவைக்கு வெளியேயும் எதிர்க்கட்சி எம்பிக்கள் தங்கள் கண்டனங்களை தெரிவித்தனர்.

## சந்திரயான் 4 முதல் சமுத்திரயான் வரை: மத்திய அமைச்சர் தந்த அப்டேட்



புதுடெல்லி: சந்திரனின் மேற்பரப்பில் உள்ள பாறைகளின் மாதிரிகளை பூமிக்கு கொண்டுவந்து ஆய்வுசெய்யும் வகையில், சந்திரயான்-4 வரும் 2027-ம் ஆண்டில் விண்ணில் ஏவப்படும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜித்தேந்திர சிங் தெரிவித்துள்ளார்.


இது குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், “சந்திரயான் 4 திட்டம் குறைந்தது இரண்டு தனித்தனியான ஹெவிலிஃப்ட் எல்விஎம் 6 ராக்கெட்களை ஏவுவதை உள்ளடக்கியது. இவை அந்தப் பயணத்தின்போது ஐந்து வெவ்வேறு கூறுகளை சுமந்து சென்று பூமியின் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தும். சந்திரயான் 4 திட்டம், சந்திரனின் மேற்பரப்பில் இருந்து மாதிரிகளை சேகரித்து பூமிக்கு கொண்டுவருவதை நோக்கமாக கொண்டது. இந்திய விண்வெளி வீரர்களை பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட விண்கலத்தில் பூமியின் தாழ்வான சுற்றுவட்டப் பாதைக்கு அனுப்பி மீண்டும் பாதுகாப்பாக திருப்பி அழைத்து வரும் ககன்யான் திட்டம் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படும். அதேபோல், 2026-ல் மூன்று விஞ்ஞானிகளை நீர்மூழ்கி கப்பலில் கடலில் 6,000 மீட்டர் ஆழத்துக்கு அழைத்துச் சென்று ஆராய்ச்சி நடத்தும் சமுத்திரயான் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தச் சாதனை, இந்தியாவின் ககன்யான் போன்ற பிற மைல்கல் சாதனைகளுடன் இணைக்கப்படக் கூடிய சாதனையாகும். இது இந்தியாவின் அறிவியல் சிறப்பை நோக்கிய பயணத்தின் ஒரு தற்செயல் நிகழ்வாகும். சமுத்திரயான் திட்டம் குறித்து பிரதமர் மோடி தனது குடியரசு தின உரையில் சுட்டிக்காட்டியுள்ளார். சமுத்திரயான் திட்டம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு முக்கியமான கனிமவளங்கள், அரிதான உலோகங்கள், மற்றும் கண்டுபிடிக்கப்படாத கடல்வாழ் பல்லுயிர்களைக் கண்டறிய உதவும். அதேபோல், வயோம்மித்ரா என்ற ரோபோட்டை ஏற்றிச் செல்லும் மனிதர்கள் இல்லாமல் செல்லும் ககன்யான் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) கடந்த 1969-ம் ஆண்டு உருவாக்கப்பட்டாலும், அதன் முதல் ராக்கெட் ஏவுதளம், இரண்டு தசாப்தங்கள் கழித்து 1993-ம் ஆண்டே நிர்மானிக்கப்பட்டது. இரண்டாவது ஏவுதளம் 2004-ம் ஆண்டு நிர்மானிக்கப்பட்டது. அதற்கும் அடுத்த பத்தாண்டுகள் எடுத்துக்கொண்டது. கடந்த 10 ஆண்டுகளில் இந்திய விண்வெளித் துறை உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு என்ற இரண்டு வகையிலும் முன்னெப்போதுமில்லாத அளவில் விரிவாக்கம் அடைந்துள்ளது. நாம் இப்போது மூன்றாவது ராக்கெட் ஏவுதளத்தையும், முதல் முறையாக கனகர ராக்கெட்களையும் உருவாக்கி வருகிறோம். அதேபோல் ஸ்ரீஹரிக்கோட்டாவுக்கு வெளியே, தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் சிறிய செயற்கைக்கோள் ஏவுதளத்தை உருவாக்க உள்ளோம். தற்போது 8 பில்லியன் அமெரிக்க டாலராக மதிப்பிடப்பட்டுள்ள இந்திய விண்வெளி பொருளாதாரம் அடுத்த பத்தாண்டுகளில் 44 பில்லியன் அமெரிக்க டாலராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது உலகளாவிய விண்வெளி சக்தியாக இந்தியாவின் பங்கை மேலம் உறுதிப்படுத்தம். கடந்த 10 ஆண்டுகளில் விண்வெளித் துறையினை தனியாருக்கு திறந்து விட்டது போன்ற சீர்திருத்த நடவடிக்கை புதிய கண்டுபிடிப்புகள்,

# பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக தமிழக அரசின் புதிய முடிவுக்கு அரசு ஊழியர்கள் கடும் எதிர்ப்பு




சென்னை:பிப்-07 பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திடவும் மாநில அரசின் நிதி நிலைமையையும் பணியாளர்களின் ஓய்வூதியக் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு புதிய ஓய்வூதிய முறை குறித்து பரிந்துரைப்பதற்காக அதிகாரிகள் குழு அமைத்ததற்குத் தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட குழு அமைக்கப்பட உள்ளதாக தமிழக அரசு அறிக்கை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் கூறுகையில், “கடந்த 1.4.2003 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதே வேளையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு தேசிய ஓய்வூதியத் திட்டம் 1.1.2004 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு தொடர்ந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமே தொடர அனுமதிக்கப்பட்டது. எனினும் மாநில அரசுப்பணியாளர்கள் 1.4.2003-க்கு முன்பிருந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டி தொடர்ந்து கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். இந்த நிலையில், கடந்த மாதம் 24-ந்தேதி மத்தியப் பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எனவே பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. மாநில அரசின் நிதி நிலையினையும், பணியாளர்களின் ஓய்வூதியக் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தத் தக்க உரிய ஓய்வூதிய முறை குறித்து பரிந்துரையினை அரசிற்கு அளித்திட அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அந்த குழுவில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கூடுதல் தலைமை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ் முன்னாள் இயக்குனர் கே.ஆர். சண்முகம், நிதித்துறை துணை செயலாளர் பிரத்திக் தாயள் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இக்குழு தனது விரிவான அறிக்கை மற்றும் பரிந்துரையை 9 மாதங்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தென்காசி மாவட்டத்தில் விதி மீறிய கனிமவள வாகனம் அதிகாரிக்கு கொலை மிரட்டல் விடுத்த மாபியா கும்பல்!




தென்காசி;பிப்-07

தென்காசி மாவட்டம் புளியரை சோதனைச் சாவடி அருகே மோட்டார் வாகன ஆய்வாளர் குமார் மேற்கொண்ட சோதனையில், KL 23 X 4910 என்ற பதிவு எண்ணுடைய கனிமவள ஏற்றுமதி வாகனம், தமிழ்நாடு தற்காலிக அனுமதி சிட்டை பெற்றிருக்காமல் இயங்கியது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக, ஆய்வாளர் அந்த வாகனத்தை புளியரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

ஆய்வாளரை மிரட்டிய மாபியா கும்பல்

வாகன உரிமையாளர்கள், தங்களது வாகனத்தை விடுவிக்குமாறு ஆய்வாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஆய்வாளர் காவல்துறைக்கு தகவல் தெரிவித்தவுடன், வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். ஆனால், இதற்குப் பின்னணியில் மாபியா கும்பல் ஆய்வாளரை கொலை மிரட்டல் விடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தவறான பதிவுகளுடன் ஓடும் கனிமவள வாகனங்கள்

மேலும், இந்த வாகனம் எம்-சென்ட் (M-Sand) ஏற்றி வந்தது. இதுபோன்று, வாகன உரிமை தவறாக இருக்கிறது, வாகன எண்ணும் (Registration Number) இன்ஜின் எண்ணும் (Engine Number) வேறுபடுகிறது போன்ற விஷயங்கள் வெளிச்சத்துக்கு வருகிறது. சமூக ஆர்வலர்கள் இதுபோன்ற நிலவரங்கள் காவல்துறையினரால் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசு நடவடிக்கை எடுக்குமா?

பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும், தென்காசி மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழக அரசு இதற்குத் தலையிட்டு, அரசு விதிகளை மீறி இயங்கும் கனிமவள வாகனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் புளியரை சோதனைச் சாவடி முன்பு எடை நிலையம் அமைக்க வேண்டும், இதன் மூலம் அரசு வருவாய் அதிகரிக்க முடியும் மாபியா கும்பல் கொலை மிரட்டல் விடுத்த விவகாரத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். இந்த விவகாரம் குறித்து தென்காசி மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் அவசர நடவடிக்கை எடுக்குமா? என்பதை பொது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

## திருப்பரங்குன்றம்: எச்.ராஜா மதவெறி தகரும்- மதுரை மாவட்ட நிர்வாகம் தோல்வி-சு.வெங்கடேசன் எம்பி தாக்கு!



சென்னை:பிப்-07 மதுரை திருப்பரங்குன்றத்திலும் அச்சு அசலாக அயோத்தி மாதிரியை இந்துத்துவா அமைப்பினரால் அரங்கேற்ற முடிகிறது என்றால் மதுரை மாவட்ட நிர்வாகம் மொத்தமாக தோல்வி அடைந்துள்ளது என்பதே பொருள்; திடீரென இந்த பிரச்சனை இவ்வளவு பெரிதாக மாறுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக, மாவட்ட நிர்வாகத்தின் அணுகுமுறை இருக்கிறது என்று சிபிஎம் கட்சியின் மூத்த தலைவரும் மதுரை எம்பியுமான சு.வெங்கடேசன் கடுமையாக விமர்சித்துள்ளார். திருப்பரங்குன்றத்தை மையப்படுத்தி எழுப்பட்டுள்ள பிரச்சனை முருகப்பெருமான் சம்பந்தப்பட்டதோ, சிக்கந்தர் தர்ஹா சம்பந்தப்பட்டதோ அல்ல, முழுக்க முழுக்க பாஜக-வின் வெறுப்பு அரசியல் சம்பந்தப்பட்டது. திருப்பரங்குன்றம் மலையை வைத்து இந்துத்துவா கும்பல் தங்களின் மதவெறி நிகழ்ச்சி நிரலை அரங்கேற்ற கடுமையாக முயற்சி செய்து வருகின்றன. 90-களில் இராமகோபாலன் வகையறாக்கள் முயற்சி செய்து தோல்வியடைந்ததை இப்பொழுது ஹெச்.ராஜா, அண்ணாமலை வகையறாக்கள் கையிலெடுத்துள்ளனர். திருப்பரங்குன்றம் மலை மீது இந்து அறநிலையத்துறைக்கான உரிமை என்ன, சிக்கந்தர் தர்காவுக்கான உரிமை என்ன என்பது குறித்து, பல ஆண்டுகளுக்கு முன்பே நீதிமன்றங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை தீர்ப்பு வழங்கி உறுதிப்படுத்தியுள்ளன. திருப்பரங்குன்றத்து மக்களாலோ, அல்லது சம்பந்தப்பட்ட இந்து அறநிலையத்துறை நிர்வாகத்தாலோ அல்லது தர்கா நிர்வாகத்தாலோ உரிமை சம்பந்தமான பிரச்சனை எதுவும் இப்போது எழுப்பப் படவில்லை. பின்னர் பிரச்சனையை எழுப்புவது யார்? ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக-வின் அமைப்புகள்தான் ஒன்றாகவும் நன்றாகவும் இருக்கும் ஊரில் மதவெறியை கிளப்பிவிட்டு தங்களின் வாக்கு வங்கியை பலப்படுத்த இதுவொன்றே வழி என்று இறங்கியுள்ளன. அயோத்தி துவங்கி சம்பல் வரை அரங்கேற்றிய நிகழ்ச்சி நிரலை இங்கும் அரங்கேற்ற முயல்கின்றனர். இவர்கள் தங்களின் நிகழ்ச்சி நிரலை அரங்கேற்றிய இந்த இடங்களில் எல்லாம் மாவட்ட நிர்வாகம் மற்றும் நீதிமன்றங்கள், இவர்களின் செயல்திட்ட நிறைவேற்றத்தின் பகுதியாக இருந்துள்ளன என்பது கசப்பான உண்மை. திருப்பரங்குன்றத்திலும் அச்சு அசலாக அதே மாதிரியை இவர்களால் அரங்கேற்ற முடிகிறது என்றால் மாவட்ட நிர்வாகம் மொத்தமாக தோல்வி அடைந்துள்ளது என்பதே பொருள். திடீரென இந்த பிரச்சனை இவ்வளவு பெரிதாக மாறுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக, மாவட்ட நிர்வாகத்தின் அணுகுமுறை இருக்கிறது.

# டாஸ்மாக்கில் கள்ளச் சாராயம் விற்பதாக வீடியோ: அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம்



சென்னை: பிப்-07 சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே டாஸ்மாக் கடையில் கள்ளச்சாராயம் விற்பனை தொடர்பான வீடியோ வெளியான நிலையில், இச்சம்பவத்துக்கு அரசியல் தலைவர்கள்கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே டாஸ்மாக் கடை ஒன்றில் கள்ளச்சாராயம் விற்கப்படுவதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. 'போலீஸுக்கு பணம் கொடுத்து தான் விற்கிறோம்' என்று கள்ளச்சாராயம் விற்பவர் தைரியமாக சொல்லும் அளவுக்கு கள்ளச்சாராய விற்பனையை நிறுவனமயப்படுத்தியுள்ளதற்கு முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு வெட்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் நீங்கள் ஆட்சிக்கு வந்தது, உங்கள் கட்சி அடையாளத்தை லைசென்ஸாகப் பயன்படுத்தி சகல குற்றங்களையும் திமுகவினர் செய்வதற்குதானா?

எனவே, உடனடியாக இந்த கள்ளச்சாராய விற்பனையில் தொடர்புள்ள அனைவரையும் கைது செய்வதோடு, எந்தவித அரசியல் குறுக்கீடும் இன்றி அனைவர் மீதும் சட்ட நடவடிக்கையை உறுதிசெய்யவேண்டுமென திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்: சேலம் வளமாதேவி ஊராட்சியில் அனுமதியின்றி செயல்படும் பாரில் கள்ளச்சாராய விற்பனை கொடிகட்டி பறக்கும் நிலையை கடுமையாக கண்டிக்கிறோம். இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு திமுகவோடு தொடர்பிருப்பதாகக் கூறப்படும் நிலையில் மற்றொரு கள்ளக்குறிச்சி சம்பவம் அரங்கேறாமல் காவல்துறை தடுக்க வேண்டும்.

போதையின் பாதையில் செல்லாதீர்கள், அது உங்களை அழித்துவிடும் என முதல்வர் விளம்பர அரசியல் செய்யும் நிலையில் டாஸ்மாக் மூலமாகவே கள்ளச்சாராயத்தை விற்பது மிகவும் கண்டனத்துக்குரியது. இந்த விவகாரத்தில் தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் தேமுதிக சார்பில் மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: கட்சிகள் புறக்கணித்தும் குறையாத வாக்கு சதவீதம்!



ஈரோடு: பிப்-07 அதிமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் புறக்கணிப்பு, 4-வது ஆண்டில் மூன்றாவது தேர்தல் போன்ற காரணங்களைப் பின்னுக்குத் தள்ளி, ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் உற்சாகத்துடன் இடைத்தேர்தலை எதிர்கொண்டுள்ளனர். இதனை 67.97சதவீத வாக்குப்பதிவு உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த 2021-ம் ஆண்டு நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின்போது, ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக தேர்வு பெற்ற திருமகன் ஈவெரா மறைவை அடுத்து, கடந்த 2023-ம் ஆண்டு ஈரோடு கிழக்கில் இடைத்தேர்தல் நடந்தது. இந்த தேர்தலின்போது வாக்காளர்கள் பட்டியில் அடைக்கப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு தொடங்கி பணம், பரிசுப்பொருள் விநியோகம் என ஈரோடு கிழக்கு திருவிழா கோலம் பூண்டது. முதல்வர் ஸ்டாலின், எதிர்கட்சி தலைவர் பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள், அமைச்சர்களின் பிரச்சாரத்தால் இடைத்தேர்தல் களை கட்டியது. இந்த இடைத்தேர்தலில், 74.79 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ்.இளங்கோவன் 1,10,156 வாக்குகள் பெற்று 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இருமுனைப் போட்டி: அதற்கு நேர்மாறாக தற்போதைய இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் இருந்தாலும், திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் மற்றும் நாம் தமிழர் வேட்பாளர் சீதாலட்சுமி இடையே நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது. திமுக வேட்பாளரை ஆதரித்து, ஈரோடு மாவட்ட அமைச்சரான முத்துசாமி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மட்டும் பிரச்சாரம் செய்தனர். நாம் தமிழர் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பெரியார் குறித்த கடும் விமர்சனங்களை முன் வைத்து இந்த தேர்தல் களத்தை அணுகினார். இந்த நிலையில், அதிமுக, பாஜக, தேமுதிக, தவெக உள்ளிட்ட கட்சிகள் தேர்தலை புறக்கணித்த நிலையில், அவர்களின் தொண்டர்கள், நிர்வாகிகள் வாக்குகளைப் பதிவு செய்வார்களா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. ஆனால், கடந்த இடைத்தேர்தலைப் போலவே, இந்த இடைத்தேர்தலிலும், தேர்தலை புறக்கணித்த கட்சி தொண்டர்கள் மற்றும் வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளது வாக்குப்பதிவு சதவீதம் மூலம் நிரூபணமாகி உள்ளது.

# "திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தமிழக மக்களுக்கு மத அடிப்படைவாதிகள் சவால்!" - திருமாவளவன் கருத்து



சென்னை: பிப்-07 "திருப்பரங்குன்றத்தில் சனாதன சக்திகளைச் சரியாகக் கையாளாமல் விட்டால் அவர்கள் தமிழகம் முழுவதும் இப்படி கலவரங்களை ஏற்படுத்துவார்கள். இதைத் தமிழக அரசு உணரவேண்டும். திருப்பரங்குன்றத்தை மையமாக வைத்து மத அடிப்படைவாதிகள் தமிழக மக்களுக்குச் சவால் விடுத்துள்ளனர். அதை எதிர்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, மதச்சார்பற்ற சக்திகள் அனைவருக்கும் உள்ளது'' என்று விசிக தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் சமூக நல்லிணக்கம் நிலவுவதாலும், சட்டம் - ஒழுங்கு பாதுகாக்கப்படுவதாலும் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. மனித வளம், தொழில் வளம் என அனைத்துத் தளங்களிலும் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழகம் திகழ்வதற்கு இங்கு நிலவும் சமூக நல்லிணக்கமே காரணமாகும். தமிழக மக்களின் முன்னேற்றத்தை விரும்பாத சனாதன சக்திகள் இங்கு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தி சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கப் பார்க்கிறார்கள். இந்துக்களும், முஸ்லிம்களும் சமய நம்பிக்கையோடு மட்டுமின்றி சகோதரத்துவத்தோடும், தமிழர் என்ற உணர்வோடும் பல நூறு ஆண்டுகளாகத் திருப்பரங்குன்றத்தில் தத்தமது வழிபாட்டுத் தலங்களில் அமைதியாக வழிபட்டு வருகின்றனர். எப்படியாவது தமிழகத்திலும் மதக் கலவரத்தை மூட்டி தமிழர்களின் ஒற்றுமையைக் கெடுக்க எண்ணும் சனாதனக் கும்பல் இப்போது திருப்பரங்குன்றத்தில் ரத்தக் களறியை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இத்தகையப் பிரிவினைவாத முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். தமிழகத்தின் சமய நல்லிணக்கச் சூழலைக் கெடுக்க முயற்சிக்கும் நாசகார சக்திகளை தமிழக அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். திருப்பரங்குன்றத்தில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக சமணம், சைவம், வைணவம் என அனைத்து வழிபாடுகளும் நடந்துள்ளன. அங்குள்ள முருகன் கோயில் மிகவும் பழமையானது. அந்தக் கோயில் அமைந்துள்ள மலையின் உச்சியில் காசி விஸ்வநாதர் கோயிலும் அதன் மறுபுறத்தில் சுல்தான் சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்காவும் உள்ளன.தர்காவில் ஆடு, கோழி பலியிட்டு நேர்த்திக் கடன் செய்வது வழக்கம். சில நாட்களுக்கு முன்பு அப்படி நேர்த்திக் கடன் செய்யச் சென்ற முஸ்லிம் ஒருவரைக் காவல்துறையினர் தடுத்துள்ளனர். அதன்பின் வருவாய் வட்டாட்சியர் தர்காவில் ஆடு, கோழி பலியிடக்கூடாது எனத் தடை விதித்துள்ளார். அதுதான் இந்தப் பிரச்சினைக்கான மூலக் காரணம் எனத் தெரிகிறது.

# அரசு மருத்துவமனைகளில் 'அவுட் சோர்சிங்' மூலம் டயாலிசிஸ் சிகிச்சை - தமிழக அரசு திட்டமும், 'தனியார் மய' சர்ச்சையும்




மதுரை: பிப்-07 அரசு மருத்துவமனைகளில் ஒடிசா, தெலுங்கானா மாநிலங்களை பின்பற்றி 'டயாலிசிஸ்' சிகிச்சையை 'அவுட் ஸ்சோர்சிங்' முறையில் செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் 38 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 100-க்கும் மேற்பட்ட அரசு தாலுகா மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. சிறுநீரகம் செயலிழந்து உயிருக்கு போராடும் நோயாளிகளுடைய உயிர் காக்கும் வகையில் இச்சிகிச்சை வழங்கப்படுகிறது. தமிழக அரசு மருத்துமனைகளில் 1500-க்கும் மேற்பட்ட டயாலிசிஸ் எந்திரங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. ஒரு எந்திரத்துக்கு ரூ.6 லட்சம் வீதம் சுமார் ரூ.80 கோடிக்கு மேல் அரசு செலவு செய்துள்ளது. இதற்காக சிகிச்சை அளிக்கப்படும் வார்டுகளில் படுக்கைகள், ஏசி வசதிகள், சுத்தீகரிக்கப்பட்ட ஆர்ஓ தண்ணீர் வசதி, மின்சாரம், சிறுநீரகவியல் துறை சிறப்பு மருத்துவ வல்லுநர்கள், செவிலியர்கள், டெக்னீஷன்கள் மற்றும் இதர மருத்துவ பணியாளர்கள் என்று மிக பிரமாண்ட மருத்துவ கட்டமைப்பு வசதியை தமிழக அரசு செய்து கொடுத்துள்ளது. இந்நிலையில், அனைத்து அரசு மருத்துவமனைகளில் செயல்பாட்டில் டயாலிசிஸ் சிகிச்சைகளை மருத்துவக்கல்வி இயக்ககம், 'அவுட்சோர்சிங்' முறையில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கான முன்மொழிவு அறிக்கையை மருத்துவக் கல்வி இயக்குநர், கடந்த 12.12.2024 தேதி மாநில சுகாதாரத் துறை செயலர் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த அறிக்கை தற்போது வெளியாகி மருத்துவமனை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து மதுரை சமூக செயற்பாட்டாளர் கார்த்திக் கூறுகையில், ''தமிழகத்தில் 38 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்ளன. இந்த கல்லூரிகள் ஆண்டுக்கு 5,250 எம்பிபிஎஸ் மருத்துவப் படிப்பு மாணவர்களையும், 37 சிறுநீரகவியல் சிறப்பு மருத்துவ பட்டமேற்படிப்பு மாணவர்களையும் உருவாக்கி வருகிறது. இந்த எண்ணிக்கை எந்த மாநிலத்தில் இல்லாதது ஒன்று. தற்போது இந்தியாவிலேயே டாப் நம்பர் 1 இடத்தில் தமிழ்நாடு சிறுநீரகத் துறை வகிக்கிறது.

தமிழத்தில் உள்ள சிறுநீரகவியல் மருத்துவ நிபுணர்கள் எண்ணிக்கையில் 20 சதவீதம்கூட ஒடிசா, தெலங்கானா மாநிலங்களில் இல்லை. ஆனால், அந்த மாநிலங்களை பின்பற்றி மருத்துவக் கல்வி இயக்குநர் 'டயாலிஸிஸ்' சிகிச்சை அவுட் சோர்ஸிங் முறையில் மாற்றுவதற்கான முன்மொழிவு அறிக்கையை சுகாதாரத் துறை செயலர் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறார்.

# திமுக ஆட்சி தாக்கத்தால் பெண்களுக்கு தற்காப்பு பயிற்சி: அதிமுக மகளிரணி கூட்டத்தில் தீர்மானம்



சென்னை: பிப்-07 திமுக ஆட்சியில் நடைபெறும் பெண்களுக்கு எதிரான தாக்குதல்களில் இருந்து தற்காத்துக்கொள்ள மகளிருக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அளிக்கப்படும் என்று அதிமுக மகளிரணி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதிமுக மகளிரணி சார்பில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77-வது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் இன்று (பிப்.6) நடைபெற்றது. கட்சியின் மகளிரணி செயலாளர் பா.வளர்மதி தலைமையில், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.கோகுல இந்திரா, எஸ். வளர்மதி, வி.சரோஜா, வி.எம்.ராஜலட்சுமி முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: ஜெயலலிதாவின் பிறந்தநாளை (பிப்.24) ஏழை, எளியோர் பயன்பெறும் திருநாளாக எழுச்சியுடன் கொண்டாடுவோம். அன்று தமிழகம் முழுவதும் ஆங்காங்கே அன்னதானம் வழங்குதல், மகளிருக்கான நலதிட்ட உதவிகள் வழங்குவதல், விளையாட்டு போட்டிகள் நடத்துதல், மாணவர்களுக்கு கல்வி உபரகணங்கள் வழங்குவதல், இலவச திருமணம் நடத்திவைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதிக்கும் 50 செயல் வீராங்கனைகளை தேர்வுசெய்து, உறக்கமின்றி பணியாற்றி, 2026 சட்டப்பேரவை தேர்தலில் பொதுச்செயலாளர் பழனிசாமியை முதல்வராக்குவோம். திமுக ஆட்சியில் பெண்களுக்கு எதிராக நடைபெற்று வரும் தாக்குதல்களில் இருந்து தற்காத்துக்கொள்ள பயிற்சி வழங்கப்படும் என்பன உள்ளிட்ட 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் கட்சி கொள்கை பரப்பு இணை செயலாளர் விந்தியா, மகளிரணி இணை செயலாளர்கள் கனிதா சம்பத், ஏ.எஸ்.மகேஸ்வரி, கு.சித்ரா எம்எல்ஏ, கட்சி செய்தித் தொடர்பாளர் நிர்மலா பெரியசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# பேச்சுவார்த்தை தோல்வி - திட்டமிட்டபடி போராட்டம் என டாஸ்மாக் தொழிற்சங்கம் அறிவிப்பு





சென்னை: பிப்-07 பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு கோரும் கால அவகாசத்தை ஏற்க முடியாது என்றும், திட்டமிட்டபடி போராட்டம் தொடரும் எனவும் டாஸ்மாக் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம், விற்பனையாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை தலைமை செயலகம் முன்பு பிப்.11-ம் தேதி காத்திருப்பு போராட்டம் நடத்த அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பிப்.11-ம் தேதி நடைபெற இருக்கும் காத்திருப்பு போராட்டம் குறித்த பேச்சுவார்த்தை நடத்த டாஸ்மாக் சங்கங்களின் கூட்டமைப்புக்கு, டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் அழைப்பு விடுத்திருந்தார். இதையடுத்து, சென்னை எழும்பூரில் உள்ள தலைமை அலுவலகத்தில், டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் விசாகன் தலைமையில் தொழிற்சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தைக்கு பிறகு, தமிழ்நாடு அரசு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் பெரியசாமி கூறும்போது, "பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகள் மீது டாஸ்மாக் நிர்வாகம் எடுத்து வரும் நடவடிக்கைகளை மேலாண்மை இயக்குநர் விரிவாக எடுத்துரைத்தார். அரசு தரப்பில் இன்னும் சில அனுமதிகள் பெற வேண்டிய அவசியம் இருப்பதை எங்களுக்கு புரியவைத்தார். இவையெல்லாம் எங்களிடம் கூறிய அவர், எங்களது போராட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எங்கள் கோரிக்கைகளுக்காக 22 ஆண்டுகளாக காத்திருந்தோம். பல அதிகாரிகளிடம் பல முறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். இதற்கு மேலும், அரசு கோரும் கால அவகாசத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. போராட்டம் திட்டமிட்டப்படி நடைபெறும். போராட்டத்துக்கு முன்பு சுமுகமான முடிவு எட்டப்படுமானால், மேலாண்மை இயக்குநரின் கோரிக்கையை பரிசீலனை செய்வோம்" என்று அவர் கூறினார்.

## கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் அறையின் சுவர் கடிகாரத்தில் ரகசிய கேமரா - வீடியோ வெளியாகி பரபரப்பு



கிருஷ்ணகிரி: பிப்-07 கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் அறையில் இருந்த சுவர் கடிகாரத்தில் பொருத்தப்பட்டிருந்த ரகசிய கேமராவில் பதிவான வீடியோ இன்று சமூக வலைதளங்களில் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது.

கிருஷ்ணகிரியில், காந்தி சாலையில் கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகம் உள்ளது. இங்கு ஆணையராக கிருஷ்ணமூர்த்தி பணியாற்றி வருகிறார். நகராட்சி தலைவராக பரிதா நவாப் இருக்கிறார். இவரது கணவர் நவாப், திமுக நகர செயலாளராக இருப்பவர். இந்நிலையில், ஆணையாளர் அறையில் கடந்த மாதம் 25-ம் தேதி சுகாதார ஆய்வாளர் ராமகிருஷ்ணன், நகர திமுக செயலாளர் நவாப் ஆகியோருக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டதும், அவர்களை ஆணையாளர் சமதானப்படுத்தும் வீடியோ காட்சிகள் இன்று சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

புகார்: இதனிடையே, ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணகிரி நகர காவல் நிலையத்தில் அளித்த புகாரில், 'கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள எனது அறையில் தமிழ் எண்ணுருக்களுடன் கூடிய சுவர் கடிகாரத்தில் (டிஜிட்டல் கடிகாரம்) ரகசிய கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இந்த கேமரா எந்த நபரால் பொருத்தப்பட்டுள்ளது என்பதை கண்டறிந்து அவர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

ஆணையாளர் விளக்கம்: இது குறித்து ஆணையாளர் கூறும்போது, 'நான் விடுப்பில் சென்றிருந்தேன். கடந்த 29-ம் தேதி எனது அறைக்குள், நகராட்சி ஊழியர்கள் நுழையும் போது, அங்கிருந்த டிஜிட்டல் கடிகாரத்தில் பீப் சத்தம் கேட்டுள்ளது. இதையடுத்து ஊழியர்கள் கடிகாரத்தை கழற்றி பார்த்தபோது உள்ளே ரகசிய கேமரா பொருத்தப்பட்டிருந்தது தெரிந்தது. கடிகாரத்தில் இருந்த கேமரா, சிப் எடுக்கப்பட்ட நிலையில், சுகாதார ஆய்வாளர், திமுக நகர செயலாளர் இடையே ஏற்பட்ட வாக்குவாத காட்சிகள் மட்டும் வெளியானது எப்படி என தெரியவில்லை. மேலும், நகராட்சியில் 4 இடங்களில் டிஜிட்டல் கடிகாரம் உள்ளது. மற்ற இடங்களில் வைக்கப்படாத ரகசிய கேமரா எனது அறையில் வைக்கப்பட்டது ஏன் என்று தெரியவில்லை. இது குறித்து காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி, தொடர்புடையவர்கள் அனைவரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

வாக்குவாதத்துக்கான காரணம்: கடந்த மாதம் 25-ம் தேதி திமுக, அதிமுக சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடந்தது. இதில் அதிமுக பொதுக்கூட்டம் இடத்தில் சுகாதார பணிகள் மேற்கொண்ட ஊழியர்கள், திமுக பொதுக்கூட்டம் நடக்கும் இடத்தில் செய்யவில்லை என சுகாதார ஆய்வாளர், திமுக நகர செயலாளர் இடையே ஆணையாளர் அறையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து தான், நகராட்சி அலுவலகம் முன்பு, நவாப்பை கண்டித்து, அரசு ஊழியர்களும், சுகாதார ஆய்வாளரை கண்டித்து தற்காலிக டெங்கு தடுப்பு பணியாளர்களும் அடுத்தடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

## நாராயணசாமி நாயுடு நூற்றாண்டு நிறைவில் விவசாயிகள் மாநாடு நடத்த தமிழக அரசுக்கு பாஜக வலியுறுத்தல்



சென்னை: பிப்-07 நாராயணசாமி நாயுடு நூற்றாண்டு நிறைவில் விவசாயிகள் பேரணி, மாநாடு நடத்த வேண்டும் என தமிழக அரசை பாஜக வலியுறுத்தி உள்ளது.

இது குறித்து பாஜக மாநில செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், "விவசாயிகளின் வாழ்வுரிமைக்காக, தன் வாழ்வையே அர்ப்பணித்த மாபெரும் விவசாய சங்கத் தலைவர் சி.நாராயணசாமி நாயுடுவின் 100-வது பிறந்த நாள் இன்று. விவசாயிகளுக்காகப் போராடி வரலாறு படைத்த நாராயணசாமி நாயுடுவின் நூற்றாண்டை முன்னிட்டு, "துடியலூர் - கோவில்பாளையம் இணைப்புச் சாலையில் அமைக்கப்பட்டு வரும், குருடம்பாளையம் என்.ஜி.ஓ.காலனி ரயில்வே மேம்பாலத்துக்கு நாராயணசாமி நாயுடு பெயர் சூட்டப்படும்.

அவர் பிறந்து வாழ்ந்த வையம்பாளையத்தில் நூற்றாண்டு நினைவு வளைவு அமைக்கப்படும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். நாராயணசாமி நாயுடுவை ஒரு விவசாய சங்க தலைவர் என்ற அளவில் மட்டும் கடந்து சென்று விட முடியாது. அறவழியில் போராடி விவசாயிகளின் கோரிக்கைகளை வென்றெடுத்த புரட்சியாளர் அவர். இன்று விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது என்றால், அதற்கு நாராயணசாமி நாயுடு நடத்திய போராட்டங்கள் தான் காரணம். இன்று தமிழகத்தில் இத்தனை விவசாய சங்கங்கள் இருக்கிறது. விவசாய பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கிறார்கள். போராடுகிறார்கள் என்றால் அதற்கு நாராயணசாமி நாயுடு நடத்திய போராட்டங்கள் தான் காரணம்.

தமிழக விவசாயிகள் வரலாற்றில், தமிழகப் போராட்ட கள வரலாற்றில் மிக மிக முக்கியமானவர் நாராயணசாமி நாயுடு. அவரது வாழ்க்கை விவசாயிகளுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் ஒர் பாடம். எனவே அவரது நூற்றாண்டையொட்டி நினைவு வளைவு அமைப்பது, ரயில்வே மேம்பாலத்துக்கு பெயர் வைப்பதோடு மட்டும் நின்று விடாமல், அவரது வாழ்க்கை வரலாற்றை, போராட்ட குணத்தை, தமிழக மக்களிடம் குறிப்பாக, விவசாயிகள், இளைஞர்களிடம் கொண்டுச்சேர்க்க வேண்டும். அதற்காக தமிழகம் முழுவதும் கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்தப்பட வேண்டும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நாராயணசாமி நாயுடு குறித்த பேச்சு, கட்டுரை போட்டிகள் நடத்தப்பட வேண்டும். அவரது நூற்றாண்டு நிறைவில் மிகப்பெரிய விவசாயிகள் பேரணியுடன், மாநாட்டையும் தமிழக அரசு நடத்த வேண்டும்" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## சென்னை | டாஸ்மாக் பாரில் மது அருந்திக் கொண்டிருந்த கட்டிட மேஸ்திரியை பீர் பாட்டிலால் தாக்கி பணம் பறிப்பு

சென்னை: பிப்-07 டாஸ்மாக் பாரில் மது அருந்திக் கொண்டிருந்த கட்டிட மேஸ்திரியை பீர்பாட்டிலால் தாக்கி பணம் பறித்ததாக பிரபல ரவுடிகள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேனாம்பேட்டை, வ.உ.சி தெரு பகுதியைச் சேர்ந்தவர் மகேஷ் (36). கட்டிட மேஸ்திரி வேலை செய்து வரும் இவர் கடந்த 2-ம் தேதி அதே பகுதியில் உள்ள திருவள்ளுவர் சாலை, டாஸ்மாக் மதுபான பாரில் மது அருந்திக்கொண்டிருந்தார். அப்போது, அருகில் மது அருந்திக்கொண்டிருந்த 3 நபர்கள் மகேஷிடம் பணம் கேட்டு கத்திமுனையில் மிரட்டியுள்ளனர். அவர் பணம் கொடுக்க மறுக்கவே ஆத்திரமடைந்த 3 நபர்களும் மகேஷின் தலையில் பீர் பாட்டிலால் தாக்கி அவரிடமிருந்து செல்போன் மற்றும் பணத்தை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். காயம் அடைந்த அவரை அங்குள்ளவர்கள் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய மகேஷ் இதுகுறித்து தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில், மகேஷை தாக்கி பணப்பறிப்பில் ஈடுபட்டது தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலை பகுதியைச் சேர்ந்த சதீஷ் என்ற குள்ள சதீஷ் (21), கோட்டூர்புரம் சித்ரா நகர் விக்ரம் (22), ஆழ்வார்பேட்டையைச் சேர்ந்த ரோகித் (22) என்பது தெரிந்தது. தலைமறைவாக இருந்த இந்த 3 பேரையும் போலீஸார் கைது செய்தனர். பின்னர், அவர்களை நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர்.

முன்னதாக நடத்தப்பட்ட விசாரணையில் கைது செய்யப்பட்ட சதீஷ் மீது 9 வழக்குகளும், விக்ரம் மீது 7 வழக்குகளும், ரோகித் மீது 2 வழக்குகளும் உள்ளது தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

## திருப்பூரில் கோர சம்பவம்.. தனியார் பேருந்து கவிழ்ந்து 4 பேர் பலி.. அதிர்ச்சியடைந்த மக்கள்




திருப்பூர்: பிப்-07 பிப்-07 திருப்பூர் அருகே தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 2 கல்லூரி மாணவர்கள் உள்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகி உள்ளனர். இச்சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அருகே உள்ள பல்லகவுண்டம்பாளையம் பகுதியில் திருப்பூரில் இருந்து ஈரோடு நோக்கி தனியார் பேருந்து ஒன்று இன்று காலை 9.15 மணியளவில் சென்று கொண்டிருந்தது. இந்தப் பேருந்தில் 70 க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளனர். இந்நிலையில், தேசிய நெடுஞ்சாலையில் ஒரு கண்டெய்னர் லாரி சென்று கொண்டிருந்துள்ளது. அந்த லாரியை தனியார் பேருந்து முந்துவதற்கு முயன்ற போது நிலைதடுமாறி பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது. இந்த விபத்தில் 2 கல்லூரி மாணவர்கள் உள்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 20-க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்துள்ளனர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த மீட்புப் படையினர் மற்றும் போலீஸார் பலத்த காயமடைந்தவர்களை மீட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

## கரூரில் ரூ.1.25 லட்சத்தை மறைத்த 8 போலீஸார் மீது டிஐஜி நடவடிக்கை

கரூரில்: பிப்-07 கரூர் வெங்கமேடு சின்னகுளத்துபாளையம் பகுதியில் ஜன. 30-ம் தேதி காரில் குட்கா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை கடத்திய 3 பேரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர். அவர்களிடமிருந்த 168 கிலோ புகையிலைப் பொருட்கள், ரூ.1.25 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்நிலையில், பறிமுதல் செய்த ரூ.1.25 லட்சத்தை கணக்கில் காட்டாமல் கரூர் நகர காவலர்கள் போலீஸார் மறைத்துவிட்டதாக புகார் எழுந்தது. இதில் தொடர்புடைய கரூர் நகர காவல் ஆய்வாளரும், வெங்கமேடு காவல் ஆய்வாளருமான மணிவண்ணன், உதவி ஆய்வாளர்கள் உதயகுமார் (தாந்தோணிமலை), சித்ரா தேவி (வெங்கமேடு), சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார், வெங்கமேடு தனிப் பிரிவு காவலர் ரகுநாத், விக்னேஷ், ஆர்.தம்பிதுரை உள்ளிட்ட 8 பேரை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி திருச்சி சரக டிஐஜி வருண்குமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். வெங்கமேடு ஆய்வாளராக இருந்த செந்தூரபாண்டி, பெண்ணிடம் ஆபாசமாகப் பேசியதாக எழுந்த புகாரில் ஏற்கெனவே காத்திருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக கடலோர பகுதிகளில் 1,000 கடல் ஆமைகள் உயிரிழப்பு எதிரொலி: கால்நடை மருத்துவர்களுக்கு சிறப்பு பயிற்சி



சென்னை: பிப்-07 தமிழக கடலோர பகுதிகளில் 1000-க்கும் மேற்பட்ட கடல் ஆமைகள் உயிரிழந்த நிலையில், வனத்துறை சார்பில் கால்நடை மருத்துவர்களுக்கு கடல் ஆமைகளை பிரேத பரிசோதனை செய்ய சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

கடல் வள பாதுகாப்பு மற்றும் மீன் வளத்தை பெருக்குவதில் கடல் ஆமைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆழ்கடலுக்கு செல்லும் இவை, இனப்பெருக்கம் செய்வதற்காக டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை தமிழகம் முதல் ஒடிஷா கடலோர பகுதிகளில் நோக்கி வந்து, முட்டையிட்டு வருகின்றன. இந்நிலையில், முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழக கடலோர பகுதிகளில் மட்டும் 1000-க்கும் மேற்பட்ட கடல் ஆமைகளும், ஆந்திர கடலோர பகுதியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆமைகளும் இறந்து அழுகிய நிலையில் கரை ஒதுங்கி வருகின்றன. இது சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## 100 நாள் வேலை திட்டம், இலவச வீட்டு மனை பட்டா நிலங்கள் ஊழல்! மோசடி! கள ஆய்வில் வெட்ட வெளிச்சம்!



சேலம்: பிப்.07 சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்,கண்ணாமூச்சி ஊராட்சியில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் REDEYE HRO FOUNDATION அமைப்பின் மாவட்ட துணைச் செயலாளர் சி. சி. சண்முக சந்திர வேலவன் கள ஆய்வு மேற்கொண்டார். 100 நாள் வேலை திட்டத்தில் மோசடி, ஊழல் நடந்துள்ளதாக ஏற்கனவே குற்றச்சாட்டு உள்ள நிலையில்2024ம் ஆண்டுஆகஸ்ட்,செப்டம்பர்,அக்டோபர் ஆகிய மூன்று மாதங்களின் 100 நாள் வேலை திட்ட வருகை பதிவேடு காணவில்லை என அதிகாரிகள் கூறினர். எஸ்சி, எஸ்டி வீட்டு வரி ரசீதுகளை ஆய்வு செய்ததில் பல முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டது. கண்ணாமூச்சி ஊராட்சியில் நடந்துள்ள 100 நாள் வேலை திட்ட ஊழல் மோசடி, பட்டியலின மக்கள் வீட்டுமனை மோசடி சம்பந்தமான ஆவணங்களின் நகல்கள் கேட்டு REDEYE HRO FOUNDATION அமைப்பின் சேலம் மாவட்ட துணைச் செயலாளர் சி. சி. சண்முக சந்திர வேலவன் ஊராட்சி மன்ற செயலாளரிடம் மனு கொடுத்துள்ளார். கள ஆய்வின்போது சமூக ஆர்வலர் பரமசிவம் உடனிருந்தார்.

தினகனி
Namadhu Dhina Kani Daily Morning Newspaper
Press Register General Of India
PRGI NO TNTAM/2023/88253
07.02.2025

# “பொது மக்களின் பிரச்சினைகளை பரிவோடு கேட்பீர்!” - பதக்கங்களை வழங்கி காவல் ஆணையர் அருண் அறிவுரை



சென்னை: பிப்-07 பொது மக்களின் பிரச்சினைகளை போலீஸார் பரிவோடு கேட்டு தீர்த்து வைக்க வேண்டும் என, முதல்வர் காவலர் பதக்கங்களை வழங்கி காவல் ஆணையர் அறிவுரை வழங்கினார்.

தமிழக காவல் துறையில் 10 ஆண்டுகள் மெச்சத் தகுந்த வகையில், தண்டனைகளின்றி பணிபுரிந்த போலீஸாருக்கு தமிழக முதல்வரால் ஆண்டுதோறும் பொங்கல் தினத்தன்று முதல்வரின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரியும் 3,000 போலீஸாருக்கு பதக்கங்கள் வழங்க பொங்கல் தினத்தன்று தமிழக அரசால் அரசாணை வெளியிடப்பட்டது.

அதில், சென்னை பெருநகர காவல் பிரிவில் பணிபுரியும் 515 போலீஸார் மற்றும் தமிழக காவல் துறையின் இதர சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும் 255 போலீஸார் என மொத்தம் 770 போலீஸாருக்கு 2025-ம் ஆண்டிற்கான தமிழக முதல்வரின் ‘காவலர் பதக்கம்’ வழங்கும் விழா எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் இன்று மாலை நடைபெற்றது. சென்னை காவல் ஆணையர் அருண் பதக்கங்களை வழங்கி பேசியதாவது: மத்திய, மாநில அரசில் பணியாற்றுபவர்களை அரசு பணியாளர்கள் என்று கூறுகிறோம். இந்த அரசு பணிகளில் பல்வேறு துறைகள் இருக்கின்றன. சில துறைகள் பொதுமக்களோடு நேரடி தொடர்பில் இருக்கும் துறைகள். அதில் காவல்துறை மிக முக்கியமான துறை. காவல்துறை பணி என்பது அரசு பணி தான் என்றாலும், பொதுமக்களோடு மிக நெருக்கமாக பழகக் கூடிய வாய்ப்பு காவல்துறையினருக்கு இருக்கிறது.

எனவே, காவல்துறை பணி என்பது அரசு பணி என்பதை விட மக்கள் பணி என்றே கூறலாம். பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுடன் காவல்துறையை அணுகும் போது, போலீஸார் பரிவோடு அதனை கேட்டுத், தங்களால் முடிந்தவரை சட்டத்திற்கு உட்பட்டு அந்த செயலை செய்து கொடுக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து பெரும் பாராட்டே காவல்துறைக்கு கிடைக்கும் மிக முக்கியமான பதக்கமாகும்.

சென்னை காவலில் 23,000 போலீஸார் பணி புரிகின்றனர். இதில் சிலர் தவறு செய்யும்போது, அர்ப்பணிப்போடு பணிபுரியும் காவல்துறையினர் அனைவருக்கும் அது இழுக்காக அமைகிறது. இதை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு போலீஸாரும் “நம்மால் நமது காவல்துறைக்கு எந்த வகையிலும் இழுக்கு ஏற்படக் கூடாது” என்று உறுதி ஏற்க வேண்டும். இவ்வாறு காவல் ஆணையர் அருண் கூறினார்.

முன்னதாக, முதல்வரின் காவலர் பதக்கங்களை கூடுதல் காவல் ஆணையர்கள் கபில்குமார் சி.சரத்கர், கண்ணன், சுதாகர், நரேந்திரன் நாயர், ராதிகா ஆகியோரும் பகிர்ந்து வழங்கினர். மேலும், போலீஸாரின் அணிவகுப்பு மரியாதையை காவல் ஆணையர் பெற்றுக் கொண்டார். இறுதியாக பதக்கம் பெற்ற காவலர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# திருப்பரங்குன்றம் விவகாரத்தில் மதுரை ஆட்சியர் மீது வழக்கு தொடருவோம்: அதிமுக எம்.எல்.ஏ.க்கள் எச்சரிக்கை



மதுரை: பிப்-07 திருப்பரங்குன்றம் அமைதிப் பேச்சுவார்த்தையில் கையெழுத்திட மறுப்பு தெரிவித்ததாக அதிமுக பற்றி கூறிய பொய்யான தகவலை திரும்ப பெறாவிட்டால் மதுரை ஆட்சியர் சங்கீதா மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடருவோம் என அதிமுக முன்னாள் அமைச்சர், எம்எல்ஏ-க்கள் தெரிவித்துள்ளனர்.

திருப்பரங்குன்றம் மலை பிரச்சினை தொடர்பாக ஆட்சியர் சங்கீதா நேற்று வெளியிட்ட விளக்க அறிக்கையில், திருமங்கலம் வருவாய் கோட்டாச்சியர் (பொ) தலைமையில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தை கூட்டத்தில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும், அதில் அதிமுக பிரதிநிதி மட்டும் கையொப்பமிட மறுத்து சென்றுவிட்டதாகவும் குற்றம்சாட்டியிருந்தார். ஆட்சியரின் இந்த அறிக்கைக்கு அதிமுக மதுரை மாவட்டச் செயலாளர்களான செல்லூர் கே.ராஜூ, ஆர்.பி.உதயகுமார், வி.வி.ராஜன் செல்லப்பா ஆகியோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில் இன்று மதுரை மாநகர அதிமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ, எம்எல்ஏ-க்கள் ராஜன் செல்லப்பா, பெரியபுள்ளான் தலைமையில் அக்கட்சி நிர்வாகிகள் ஆட்சியர் சங்கீதாவை சந்தித்து, “திருமங்கலத்தில் நடந்த அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்தில் அதிமுக பிரதிநிதிகள் யாரும் பங்கேற்காத நிலையில் எப்படி கையெழுத்திட மறுத்ததாக குற்றம்சாட்டாலும், அந்த அறிக்கையை திரும்ப பெற வேண்டும்,” என்று ஆட்சியர் சங்கீதாவை சந்தித்து அவரிடம் கடும் வாக்குவாதம் செய்து முறையிட்டனர். இந்தச் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் வி.வி. ராஜன் செல்லப்பா கூறும்போது, “திருப்பரங்குன்றம் பிரச்சினையில் ஆட்சியர் சங்கீதா வெளியிட்ட அறிக்கையில், திருமங்கலத்தில் கோட்டாட்சியர் முன்னிலையில் ஜன.30-ம் தேதி அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்துக்கு அதிமுக எம்எல்ஏ-க்கள், மாவட்டச் செயலாளர்களை அவர் அழைக்கவில்லை. ஆனால், அறிக்கையில் மிக அழுத்தமாக, அமைதிப் பேச்சுவார்த்தையில் அதிமுக பிரதிநிதி கையெழுத்துப்போட மறுத்துவிட்டு வெளியேறியதாக ஒரு பொய்யான தகவலை கூறியிருக்கிறார்.

ஆளும்கட்சியினர் தூண்டுதலின் காரணமாக அதிமுக மீது வீண்பழி சுமத்தியிருக்கிறார். அதிமுக சாதி, மதம், இனத்துக்கு அப்பாற்ப்பட்ட கட்சியாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதிமுக மீது குற்றம்சாட்ட வேண்டும் என்பதற்காக அந்த அறிக்கை ஆட்சியர் வெளியிட்டு இருக்கிறார். அதிமுக நிர்வாகிகள் அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட புகைப்படம், வீடியோ இருந்தால் ஆட்சியர் வெளியிடட்டும். திருப்பரங்குன்றம் விவகாரத்தில் ஆட்சியர் குழப்பத்தில் இருக்கிறார். தவறான அந்த அறிக்கையை திரும்ப பெறாவிட்டால் நீதிமன்றத்தில் ஆட்சியர் மீது வழக்கு தொடருவோம் என்பதை உறுதியாக சொல்கிறோம்,” என்றார்.

‘ஆட்சியர் பாவம், பலிகடா ஆக்கப்படுகிறார்கள்’ - முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கூறும்போது, “திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற கதையாகதான் அரசின் செயல்பாடு உள்ளது. மதுரையில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் அண்ணன், தம்பிகளாக பழகி வருகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு எம்.பி., திருப்பரங்குன்றம் மலைக்கு சென்றபிறகுதான் இந்த பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது.

# விடாமுயற்சி Review: அஜித் க்ளாஸ் + மேக்கிங் ஸ்டைலிஷ், ஆனால்..!



இரண்டு ஆண்டுகளாக ரசிகர்களின் தீவிர காத்திருப்புக்குப் பிறகு ஒருவழியாக வெளியாகியுள்ளது ‘விடாமுயற்சி’ திரைப்படம். ட்ரெய்லர், பாடல்கள் பெரிதாக ஹைப் எதுவும் ஏற்றவில்லை என்றாலும், அஜித் என்ற நடிகருக்காக பெரும் எதிர்பார்ப்புடன் வெளியான இப்படம் அதற்கு நியாயம் செய்ததா என்று பார்க்கலாம்.

அஜர்பைஜான் நாட்டில் காதல் திருமணம் கொண்ட அர்ஜுன் (அஜித்) - கயல் (த்ரிஷா) தம்பதியின் வாழ்க்கையில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு விரிசல் ஏற்படுகிறது. இருவரும் பிரிந்துவிடுவதாக முடிவெடுத்த தனது மனைவியை அவரது பெற்றோர் வீட்டில் கொண்டு போய் விடுவதற்காக காரில் அழைத்துச் செல்கிறார் அர்ஜுன். செல்லும் வழியில் ஓரிடத்தில் கார் பிரேக்டவுன் ஆகிறது. அந்த வழியாக ஒரு டெலிவரி டிரக்கில் வரும் ரக்ஷித் (அர்ஜுன்), தீபிகா (ரெஜினா) தம்பதி, அவர்களுக்கு உதவும் பொருட்டு த்ரிஷாவை அழைத்துச் சென்று பக்கத்தில் இருக்கும் ஒரு கஃபேயில் இறக்கிவிடுவதாக உறுதி அளிக்கின்றனர். கார் சரியானதும் அந்த கஃபேவுக்கு செல்லும் அர்ஜுன், அங்கு தனது மனைவி இல்லாததை கண்டு அதிர்ச்சி அடைகிறார். பல இடங்களில் தேடி அலைகிறார். இந்த தேடும் படலத்தில் பல முடிச்சுகள் அவர் முன்னால் அவிழ்கின்றன. மனைவியை அவரால் கண்டுபிடிக்க முடிந்ததா என்பதே ‘விடாமுயற்சி’யின் திரைக்கதை.

# ‘சினிமாவில் கவுண்டமணி யுகத்தை மறக்க முடியாது’ - பாக்யராஜ்






கவுண்டமணி கதையின் நாயகனாக நடித்துள்ள படம், ‘ஒத்த ஓட்டு முத்தையா’. அரசியல் நையாண்டி படமான இதை நடிகரும் இயக்குநருமான சாய் ராஜகோபால் இயக்கியுள்ளார். இதில் யோகி பாபு, ராஜேஸ்வரி, சிங்கமுத்து, சித்ரா லட்சுமணன், மொட்டை ராஜேந்திரன் உட்பட பலர் நடித்துள்ளனர்.

சித்தார்த் விபின் இசை அமைத்துள்ளார். சினி கிராஃப்ட் புரொடக் ஷன் மற்றும் குட்டி ஸ்டோரி பிக்சர்ஸ் சார்பில் எம்.ஈ. ரவிராஜா, கோவை லட்சுமி ராஜன் இணைந்து தயாரித்துள்ளனர். வரும் 14-ம் தேதி வெளியாகும் இந்தப் படத்தை ஃபைவ் ஸ்டார் செந்தில் வழங்குகிறார். இதன் இசை வெளியீட்டு விழா வடபழனியில் நடந்தது. கே. பாக்யராஜ், பி.வாசு, தயாரிப்பாளர் கே. ராஜன் இணைந்து வெளியிட, படக்குழுவினர் பெற்றுக் கொண்டனர். இயக்குநர் பி.வாசு பேசும்போது, “கவுண்டமணிக்கு மானேஜர் என்று யாரும் கிடையாது. அவரிடம் டிரைவரும் கிடையாது. டைரியும் கிடையாது. அனைத்தையும் மனதில் குறிப்பாக எழுதி வைத்துக் கொள்வார். இவரைப் போன்ற எளிமையான, தயாரிப்பாளர்களுக்குச் சவுகரியமான நடிகர் தமிழ் திரையுலகில் வேறு யாரும் இல்லை. கவுண்டமணி அதிகம் நடித்தது என் இயக்கத்தில் உருவான படங்களில் தான். இதுவரை 24 படத்தில் இணைந்து பணியாற்றி இருக்கிறோம். அதில் 20 படங்கள் ஹிட்” என்றார்.

# ‚டிராகன், ஒரு கல்லூரி சீனியரின் கதை! - இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து பேட்டி



லவ் டுடே’ மூலம் நாயகனாகவும் இயக்குநராகவும் கவனிக்கப்பட்ட பிரதீப் ரங்கநாதன் நடித்து, அடுத்து வரும் படம், ‘டிராகன்’. ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் சார்பில் கல்பாத்தி எஸ்.அகோரம் தயாரித் திருக்கும் இந்தப் படத்தை, ‘ஓ மை கடவுளே’ அஸ்வத் மாரிமுத்து இயக்கி இருக்கிறார். வரும் 21-ம் தேதி வெளியாகும் இந்தப் படம் பற்றி இயக்குநரிடம் பேசினோம்.

‘டிராகன்’ யார்? - பொதுவா காலேஜ்ல சேர்ந்ததுமே யாராவது ஒரு சீனியர் பற்றி பரபரப்பா எல்லோருமே பேசிட்டு இருப்பாங்க. அவனுக்கு ஃபிரெண்டா இருந்தா கவனிக்கப்படுவோம்னு எல்லோரும் அவன்கூட சுத்துவாங்க. ஆனா, காலேஜை விட்டுட்டு வெளிய வந்தபிறகு அந்த கேரக்டரை யாருமே கண்டுக்க மாட்டாங்க. அவன் வாழ்க்கை என்னாச்சுன்னு கூட யாருக்கும் தெரியாது. அப்படி ஒரு சீனியரின் கதைதான் இது. அந்த மாதிரி கேரக்டருக்கு பட்டப் பெயர் இருக்கும். அதுதான் டிராகன். பிரதீப் ரங்கநாதன்தான் அந்த டிராகனா? - ஆமா. கல்லூரி சீனியரா வருவார். கல்லூரியும் அதுக்குப் பிறகான வாழ்க்கையும்தான் கதை. ஒருத்தரோட வெற்றி தோல்வி பற்றிப் பேசும் படம் இது. வாழ்க்கையில யாரோ ஒருத்தர்தான் வெற்றி பெறுறாங்க.

அந்த வெற்றிக்காக ஓடிட்டு இருக்கிற மத்தவங்க யாரு? அவங்க என்ன பண்றாங்க அப்படிங்கறதையும் சக்சஸ்னா என்னங்கறதையும் இந்தப் படம் பேசும். நானும் பிரதீப் ரங்கநாதனும் ஒரே கல்லூரியில் படிச்சவங்க. நான் அவருக்கு சீனியர். அதுக்காக இந்தக் கதையில எங்க வாழ்க்கையில நடந்த விஷயத்தை வைக்கல. திரைக்கதை அழகா இருக்கும். ‘லவ் டுடே’ வெற்றி, பிரதீப் ரங்கநாதன் மேல எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கு... உண்மைதான். இந்தப் படத்துல என் நண்பன் அப்படிங்கறதைத் தாண்டி, ‘லவ் டுடே’ மூலம் 100 கோடி ரூபாய் கலெக்‌ஷன் கொடுத்த ஹீரோவை எப்படி பயன்படுத்தணுமோ, அப்படித்தான் காண்பிச்சிருக்கோம். எந்த சினிமா பின்புலமும் இல்லாம ஒருத்தர் சினிமாவுக்குள்ள வந்து ஹிட் கொடுக்கிறது சாதாரண விஷயமில்லை.

ரசிகர்களோட எதிர்பார்ப்பை கண்டிப்பா இந்தப் படம் பூர்த்தி செய்யும். படத்துல 2 பைட் இருக்கு. பிரதீப், ஃபைட் பண்ணினா எப்படி இருக்குமோ அப்படித்தான் இருக்கும். அனுபமா பரமேஸ்வரன், கயாடு லோஹர்னு இரண்டு ஹீரோயின்கள். அனுபமாவை இதுல டப்பிங் பேச வச்சிருக்கேன். பிரதீப்கிட்ட தனுஷ் சாயல் இருக்குன்னு முந்தைய படத்துல சொன்னாங்க... உடல் மொழி தாண்டி, இரண்டு பேருக்கும் இயல்பிலேயே கொஞ்சம் ஒரே சாயல் இருக்கு. இந்தப் படத்துல அந்த மாதிரி எதுவும் இருக்காது. அப்படி எதுவும் தெரியக் கூடாதுன்னு கவனமா பண்ணியிருக்கோம்.

ஒரு பாடலை சிம்பு பாடியிருக்காரே? - லியோன் ஜேம்ஸ் இசை அமைச்சிருக்கார். ‘பிரேக் அப்’ பாடல் பண்ணலாம்னு பேசிட்டிருக்கும்போது, ‘ஹூக் லைன்’ என்ன வைக்கலாம்னு யோசிச்சோம். அப்ப என் டிரைவர் சொன்ன வரி, ‘ஏன்டி விட்டுப் போன’. அதை வச்சு அந்தப் பாடலை முடிச்சோம். இந்தப் பாடலுக்கு சிம்பு குரல் பொருத்தமா இருக்கும்னு நினைச்சு, அவர்கிட்ட கேட்டதும் முதல்ல மறுத்தார். பிறகு பாடறேன்னு சொன்னார். பிறகு அவரே புரமோவுல வந்து நடிச்சது எங்களுக்கு ஆச்சரியம்.

சிம்புவோட 51-வது படத்தை இயக்கபோறீங்க? - என்னோட 2-வது படத்துல அவர் நடிக்க வேண்டியது. கோவிட் வந்ததாலயும் பிறகு நான் ‘ஓ மை கடவுளே’ படத்தோட தெலுங்கு ரீமேக்குக்கு போயிட்டதாலயும் எல்லாமே தள்ளிபோயிருச்சு. அதனால இந்தப் படத்தை ஆரம்பிச்சுட்டேன். அவரோட 51-வதுபடத்துல ஒரு புது உலகம் இருக்கும். அது பேன்டஸி கதை. அவர் திறமையை வெளிப்படுத்தற மாதிரியான விஷயங்கள் அது இருக்கும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066